



திருச்சி மாவட்டம் பச்சைமலையில் உள்ள தென்புறநாடு ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியின் போது, கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகள் – கறவை மாடுகள் – வீட்டு மனைப் பட்டாக்கள் – பேருந்து சேவைகள் – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்புகள் என 1900 பயனாளிகளுக்கு ரூ.6.60 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, உழவர் சந்தை, பச்சை மலையை ஊராட்சி ஒன்றியம் ஆக்குவது, மலை கிராமங்களுக்கு இடையே சாலை மேம்பாடு , அரசு கல்லூரி மற்றும் பல்வேறு அடிப்படை கட்டமைப்புகள் சார்ந்த கோரிக்கைகளை மலை கிராம மக்கள் முன்வைத்தனர். அவற்றின் அடிப்படையில், ரூ.14 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி கட்டிடம், 3 லட்சம் ரூபாய் மதிப்பில் விவசாயத்துக்கு தேவையான குடிநீர் திட்ட வசதிகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு உடனடியாக ஆணையிடப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, சா.சி.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அருண் நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## அடித்தட்டு ஏழை, எளிய மக்களின் வெற்றிக்காக

# நம் ‘திராவிட மாடல்’ அரசு தொடர்ந்து உழைக்கும்!

## திருச்சி மாவட்டம், துறையூர் பச்சைமலை மலைவாழ் மக்கள் மத்தியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

திருச்சி,ஆக.2–

**திருச்சி மாவட்டம், துறையூர் பச்சைமலையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை நேற்று பயனாளிகளுக்கு வழங்கினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

இந்த பச்சைமலைப் பகுதிக்கு முதன்முறையாக வருகை தந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

சுதந்திரம் அடைந்த பிறகு, கடந்த 80 ஆண்டுகளில் இந்த பச்சைமலைப் பகுதிக்கு வந்த ஒரே தலைவர் என்றால், அவர் நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்தான்.

2016ஆம் ஆண்டு இந்த பச்சைமலைப் பகுதிக்கு வந்து உங்களையெல்லாம் சந்தித்து, உங்களின் கோரிக்கைகளை எல்லாம் கேட்டு, உங்களோடு உரையாடினார். இன்றைக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களை மறக்கவில்லை. அதனால்தான், இன்றைக்கு பச்சைமலைக்கு என்னை அனுப்பி வைத்திருக்கிறார்.

### நீ போய் ஆய்வு செய்!

திருச்சி மாவட்டத்திற்கு அரசுப் பயணமாகப் பல நலத்திட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் போகிறேன் என்று சொன்னவுடன், `அங்கு மட்டுமல்ல, நீ பச்சைமலைப் பகுதிக்குச் செல்ல வேண்டும். பச்சைமலை மக்களின் கோரிக்கைகள் என்ன? அவர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கிறது? அரசுத் திட்டங்கள் எல்லாம் சரியாக போய் சேர்கிறதா? இவற்றையெல்லாம் நீ போய் ஆய்வு செய்துவிட்டு வரவேண்டும்’ என்று கட்டளையிட்டு, அதன் காரணமாக இன்றைக்கு நான் பச்சைமலைக்கு வந்து உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

உங்களின் முகங்களையெல்லாம் பார்க்கும் போது, உங்களிடம் இருக்கிற உற்சாகமும் மகிழ்ச்சியும் எங்களுக்கும் தொற்றியிருக்கின்றது. இன்றைக்கு இந்த பச்சைமலைப் பகுதியில் பல்வேறு நலத்திட்டங்களை நாங்கள் தொடங்கி வைத்திருக்கின்றோம். குறிப்பாக, விவசாயிகளுக்கு 100 மாடுகள் வழங்கியிருக்கின்றோம்.

### தீட்டப்படும் திட்டங்கள்!

7 ஆயிரம் மரக்கன்றுகளை இங்கு நடப்போகிறோம். குறிப்பாக, இந்தப் பகுதியின் நீண்டநாள் கோரிக்கையான இரண்டு அரசுப் பேருந்துகளின் சேவையைத் தொடங்கி வைக்க இருக்கிறோம். நம் முதலமைச்சர் அவர்களால் கோட்டையில் தீட்டப்படும் திட்டங்கள் கடைக்கோடி மக்கள் வரை செல்லவேண்டும் என்று எங்களுக்கு எல்லாம் அடிக்கடி அறிவுறுத்துவார், கட்டளையிடுவார்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முன்னேற வேண்டும் என்றும் ஒவ்வொரு குடும்பமும், ஏன் ஒவ்வொரு தனிமனிதனும் இந்த அரசின் திட்டங்களால் பயனடைய வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துச் செயல்படக் கூடியவர். உங்களுக்குத் தெரியும், நம் அரசு அமைந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்களிடமிருந்து வந்த மிக முக்கியமான கையெழுத்து எதுவென்றால், அது `மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம்’தான்.

### பேருந்துகளின் சேவை

இன்றைக்கு இங்கு தொடங்கப்பட்டுள்ள பேருந்துகளின் சேவையை பச்சைமலைப் பகுதியில் வாழும் மகளிர், கட்டணம் ஏதுமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம். இது ஏதோ சலுகை கிடையாது. இது உங்களுக்கான உரிமை. அதே போல்தான் காலைச் சிற்றுண்டித் திட்டமும். மிக மிக முக்கியமான திட்டம். புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 3 லட்சத்திற்கும் அதிகமான மாணவிகள் வருடம் தோறும் பயன்பெற்று வருகிறார்கள்.

இந்தத் திட்டத்தை ‘தமிழ்ப்புதல்வன்’ என்ற பெயரில், மாணவர்களும் பயன்பெறுகிற வகையில், வருகிற 9ஆம் தேதி இந்தத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக `கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ என்ற மகத்தான திட்டத்தைக் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.





### மகளிர் கோரிக்கைகள்

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ், இதுவரை 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் கலைஞர் மகளிர் திட்டம் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கு வந்திருக்கிற உங்களில் பலருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய், பிரதி மாதம் 15ஆம் தேதி வந்து விடுகிறது. பலருக்கு இந்தத் திட்டம் கிடைக்கவில்லை என்று கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றை நிச்சயமாகப் பரிசீலனை செய்து, தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் இந்தத் திட்டம் கொண்டு செல்லப்படும் என்ற வாக்குறுதியை நான் இங்கு கொடுக்கிறேன்.

அதுமட்டுமல்ல, `மக்களைத்தேடி மருத்துவம்’, `இல்லம் தேடி கல்வி’ போன்ற திட்டங்கள் எல்லாம் மலைப்பகுதியில் வசிக்கிற உங்கள் அத்தனை பேரையும் மனதில் வைத்துத்தான் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள், பழங்குடியின மக்கள் தங்களின் வாழ்வில் ஏற்றத்தை அடைய, நம் ‘திராவிட மாடல்’ அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உழைத்து வருகின்றார்கள்.

இந்த பச்சைமலை இலுப்பூரைச் சேர்ந்த சகோதரி ரோகிணி ஜே.இ.இ நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்று திருச்சி என்.ஐ.டி கல்லூரியில் பொறியியல் சேர இருக்கிறார்கள். அவருக்கு நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

இப்படி அடித்தட்டு ஏழை, எளிய மக்களின் வெற்றிக்காக நம் ‘திராவிட மாடல்’ அரசு தொடர்ந்து ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. கல்வி, சுகாதாரம், விவசாயம் என எந்தத் துறையை எடுத்தாலும், இந்தியாவிற்கு எடுத்துக்காட்டு மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

> **“தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முன்னேற வேண்டும் என்றும் ஒவ்வொரு குடும்பமும், ஏன் ஒவ்வொரு தனிமனிதனும் இந்த அரசின் திட்டங்களால் பயனடைய வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துச் செயல்படக் கூடியவர்.**
>
> **உங்களுக்குத் தெரியும், நம் அரசு அமைந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்களிடமிருந்து வந்த மிக முக்கியமான கையெழுத்து எதுவென்றால், அது `மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம்’தான். ”**

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான `திராவிட மாடல்’ அரசு என்றைக்கும் உங்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும். இன்றைக்கு இங்கு பேசிய பலர் நம் அரசின் திட்டங்களைப் பற்றி மகிழ்ச்சியோடு எடுத்துச் சொன்னீர்கள். உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி மற்ற பகுதிகளுக்கெல்லாம் அடிப்படை வசதிகள் போய்ச் சேர்கிறதோ, அதேபோல இந்த மலைப்பகுதிக்கும் எல்லா வசதிகளும் கண்டிப்பாக வந்து சேரும். இங்கு சில கோரிக்கைகளையும் வைத்திருக்கிறீர்கள். முக்கியமாக நெடுஞ்சாலைத் துறை தொடர்புடைய கோரிக்கைகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, உழவர் சந்தை கேட்டிருக்கிறீர்கள். கண்டிப்பாக ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். உங்கள் வீட்டுப் பெண்களுக்குத் தற்காப்புக் கலைகள் சொல்லித்தரப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். உடனடியாக, அதற்கான ஏற்பாடுகள் செய்து அந்த வசதி செய்து தரப்படும்.

போக்குவரத்துக்கான நேரத்தை நீட்டிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படும். தனி ஒன்றியம் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். கருத்துரை அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். வன்னாடு ஊராட்சி தோனூர் கிராமத்தைச் சேர்ந்த தம்பி ஆனந்த் அவர்கள் `வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் கீழ் கூடுதல் உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இந்தப் பகுதிக்கு ஏற்றாற்போல என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் `வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் மூலமாகச் செய்ய இந்த நேரத்தில் என் உறுதியை அளிக்கிறேன்.

### தனி ஊராட்சி ஒன்றியம்

புத்தூரைச் சேர்ந்த சகோதரி பவளம் அவர்கள் அங்கன்வாடிக் கட்டடம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். புதிய அங்கன்வாடிக் கட்டடம் கட்ட ரூபாய் 14 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் தர்மன் ராஜேந்திரன் முக்கியமான கோரிக்கையை வைத்தார். பச்சைமலைப் பகுதியைத் தனி ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். பரப்பு, சுற்றளவு தூரம் மற்றும் மக்கள்தொகை அடிப்படையில், தென்புறநாடு, வன்னாடு, கோம்பை உள்ளிட்ட பகுதிகளை ஒன்பது ஊராட்சிகளாகப் பிரித்துப் புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்க அரசுக்கு முழு விவரமும் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில், அந்தக் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்.

மகளிருக்கு இலவசப் பேருந்து வசதி வேண்டும் என்று புத்தூரைச் சேர்ந்த சகோதரி ராணி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இங்கு இயக்கப்படுகிற நகரப் பேருந்து வாயிலாக விடியல் பயணத் திட்டத்தின் கீழ் அந்தப் பேருந்தில் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலே பயணிக்கலாம் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ் விட்டால் மட்டும் போதுமா? ரோடு வசதியும் மேம்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கும் நம் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 66 லட்சம் செலவில் சாலைப் பணிகளை மேற்கொள்ள, முழுவிவரம் அனுப்பியிருக்கிறார்கள். விரைவில் புதிய சாலைகள் அமைக்கப்படும். அதுமட்டுமல்லாமல், 25 பயனாளிகளுக்கு வெங்காயக் கொட்டகை அமைக்க, தலா 87 ஆயிரத்து 500 ரூபாய் விரைவில் வழங்கப்படும். குடிநீர் உட்பட பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகளுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறப்பு முகாம்கள்

கூட்டுப் பட்டாக்களைப் பிரித்து தனி பட்டாக்களாக வழங்க சிறப்பு முகாம்கள் விரைவில் நடத்தப்படும். வனத்துறை சோதனைச் சாவடியில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே திறந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அவற்றை காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை திறக்க முழு நடவடிக்கை எடுக்கப்படும்.

செல்போன் கோபுரம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கிளை, உழவர் சந்தை, வனத்துறை வசம் உள்ள சாலைகளை நெடுஞ்சலைத் துறைக்கு மாற்றம் செய்வது, விளையாட்டுத் திடல் அமைப்பது இப்படிப் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் கோரிக்கைகள் அனைத்தும், நம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும், கண்டிப்பாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதிமொழியை நான் இங்கு கூறிக் கொள்கிறேன்.

மரவள்ளி (குச்சிவள்ளி) உள்ளிட்ட கிழங்கு வகைகளுக்கு என்று இப்போது தனியாக எடை இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இப்படிப் பல்வேறு கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக, நம் ‘திராவிட மாடல்’ அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் நிறைவேற்றித் தருவார். உங்களுக்கு இன்னும் பல கோரிக்கைகள் இருக்கும். அவை அனைத்தையும் அரசிடம் தெரியப்படுத்துங்கள். நம் முதலமைச்சர் அவர்கள் எப்போதும் உங்களுக்குத் துணை நிற்பார். உங்களுடன் கலந்துரையாடியதில் மிக்க மகிழ்ச்சி.

உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், அப்துல் சமத், மேயர் அன்பழகன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ராஜேந்திரன், உப்பிலியாபுரம் ஒன்றிய பெருந்தலைவர் ஹேமலதா, ஒன்றியக் குழு உறுப்பினர் பாக்கிஸ் ஜெயக்குமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பானுமதி கிருஷ்ணமூர்த்தி உட்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.